விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்.
முன்னிலை. திரு. த.மோகன்,இ.ஆ.ப.,

ந.க.எண். பஅ1/7323/2018 நாள். 4 .02.2022.

பொருள்: பணியமைப்பு–கருணை அடிப்படையில் பணி நியமனம்–ஊரக வளர்ச்சி அலகு–ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்டம்–வல்லம் ஊராட்சி ஒன்றியம், சேர்விளாகம் ஊராட்சி செயலாளராக பணிபுரிந்து 04.08.2018 அன்று பணியிடைக்காலமான திரு.ஜெ.விஜயபாலன் என்பவரின் வாரிசுதாரர் மனைவி திருமதி.வி.வனிதா இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது– இளநிலை உதவியாளர் நிலையில்–பணிவரன்முறை செய்தல் தொடர்பாக.

பார்வை: 1.அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை நாள்: 23.01.2020.

2.வட்டார வளர்ச்சி அலுவலர்,ஊராட்சி ஒன்றியம் வல்லம்,ந.க.எண்.ஆ2/3600/2018, நாள்: 12.12.2018.

3.விழுப்புரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். பஅ1/7323/2018, நாள்:07.08.2019.

4.விழுப்புரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். பஅ1/7323/2018, நாள்: 17.08.2020.

5.அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள்: 26.02.2021.

6.சென்னை ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.18355/2021/டி2, நாள்:18.12.2021.

*-*-*

<u>உத்தரவு:</u>

பார்வை 5–ல் காணும் அரசாணையின் படி, 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எவ்வித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணிநியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாணையினை செயல்படுத்த, சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை ஆணை வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணியில் இருக்கும் போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில் விழுப்புரம் மாவட்டம், வல்லம் ஊராட்சி ஒன்றியம், சேர்விளாகம் ஊராட்சி செயலாளராக பணிபுரிந்து 04.08.2018 அன்று பணியிடைக்காலமான திரு.ஜெ.விஜயபாலன் என்பவரின் வாரிசுதாரரான மனைவி திருமதி.வி.வனிதா என்பவருக்கு மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 07.08.2019 பிற்பகல் முதல் பணியேற்று இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதால், தனியரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படியும், மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவ பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மனைவி திருமதி.வி.வனிதா கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி 10.12.2018 அன்று விண்ணப்பித்தார் என்றும் அவரது பிறந்த தேதி 05.04.1984 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 34 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்கு பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை எனத் தெரிவித்து, வல்லம் வட்டார வளர்ச்சி அலுவலர் பார்வை 2ல் காணும் கடிதம் வழியாக முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

[illegible] வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களின் முன்மொழிவு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி மேலே பார்வை—1 மற்றும் 4ல் காணும் அரசாணையின் படி கூர்ந்தாய்வு செய்ததில், தனியருக்கு எவ்வித விதித்தளர்வு மற்றும் அரசாணை எதுவும் தேவையில்லை என்ற காரணத்தினால் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி.வி.வனிதா என்பவர் பணிநியமனத்திற்கான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளதால் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், விழுப்புரம் மாவட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் பதவியில் 07.08.2019 பிற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது. அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற உரிய பணி விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

எனவே, தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியருக்காக,

பெறுதல்:

1. திருமதி.வி.வனிதா, இளநிலை உதவியாளர்,
   செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,
   விழுப்புரம் மாவட்டம்.
2. வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ/கி.ஊ),
   செஞ்சி ஊராட்சி ஒன்றியம்,
   விழுப்புரம் மாவட்டம்.(உரிய வழியாக)

4.2.2022

நகல்:

1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை,
2. மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், விழுப்புரம் மாவட்டம்.
3. பஅ1 இருப்பு கோப்பு